ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2338/57 - 2023 ජුනි මස 30 වැනි සිකුරාදා - 2023.06.30
*2338/57 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரி கட்டளைச்சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. 02/ 2023*

**மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், இந்தக் கட்டளை மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகின்றேன்;

(1) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும், உரிமம்பெற்ற தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும் விசேட சாராயம் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஆறாயிரம் (ரூபா 6,000.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(2) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும், உரிமம்பெற்ற தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படும் வெல்லப்பாகு, பனைவெல்லம், தென்னம் மற்றும் பதனிடப்பட்ட சாராயம் தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஆறாயிரத்து நானூற்று இருபது (ரூபா 6,420.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(3) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட நாட்டுத் தயாரிப்பாகிய “வெளிநாட்டு” ஸ்பிரித்துகளுக்கு, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஆறாயிரத்து அறுநூறு (ரூபா 6,600.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

1A — PG 6401 - 456 (2023/07)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(4) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும், உரிமம் பெற்ற வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்ட, ஒட்டுத்துண்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து சதவீதம் (5%) மற்றும் அதற்குக் குறைவான முழுமையான செறிவுடைய மோல்ட் மதுபானத்திற்கு, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா நான்காயிரத்து எழுநூற்று ஐம்பது (ரூபா 4,750.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(5) இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஏதேனும், உரிமம் பெற்ற வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்டு வெளியிடப்பட்ட, ஒட்டுத்துண்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஐந்து சதவீதத்திற்கு (5%) மேற்பட்ட முழுமையான செறிவுடைய மோல்ட் மதுபானத்திற்கு, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா நான்காயிரத்து தொள்ளாயிரத்து எண்பது (ரூபா 4,980.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(6) பனை மரத்தின் அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பிற தாவரங்களின் இயற்கைப் பொருட்களைக் காய்ச்சி வடிகட்டுவதைத் தவிர ஏனைய செயல்முறைகளால் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களுக்கு (கள், அல்லது தானியங்களிலிருந்து தயாரிக்கப்படும் ஏதேனும் மதுபானம் தவிர) மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா நான்காயிரத்து எழுநூற்று ஐம்பது (ரூபா 4,750.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(7) இலங்கையில் காய்ச்சி வடித்தல் அல்லாத பிற செயல்முறைகளால் உற்பத்தி செய்யப்படும் 18% இற்கு மதுசாரத்தின் அளவினைக் கொண்ட உள்ளூர் தாவர மூலப்பொருட்கள் அல்லது தாவரப்பொருட்கள் அல்லது குடிக்கக்கூடிய உள்ளூர் விலங்குப் பால் ஆகியவற்றிலிருந்து மட்டுமே தயாரிக்கப்படும் மதுபானங்களுக்கு, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா ஆயிரத்து முந்நூறு (ரூபா 1,300.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(8) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட, நாட்டுத் தயாரிப்பாகிய பால் "பஞ்ச்" தொடர்பாக, மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா மூவாயிரத்து முந்நூறு (ரூபா 3,300.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(9) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட, ஒட்டுத்துண்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நான்கு சதவீதத்திற்கு மேற்படாத (4%) முழுமையான செறிவுடைய நாட்டுத் தயாரிப்பாகிய சைடர் தொடர்பாக மதுசாரம் லீற்றர் ஒன்றிற்கு ரூபா மூவாயிரத்து அறுநூறு (ரூபா 3,600.00) என்ற விகிதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டும்;

(10) மேலே (1) முதல் (9) வரையான தீர்வை விதிப்பனவு, மேற்கூறிய மதுபானத்தின் ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் அளவு தொடர்பாக அறவிடப்படவோ அல்லது சேகரிக்கப்படவோ கூடாது; மற்றும்

(11) இலங்கையிலுள்ள ஏதேனும் இராஜதந்திர பணிக்குழுவின் பயன்பாட்டிற்காக, அத்தகைய வடிசாலையிலிருந்து வழங்கப்பட்ட ஏதேனும் மதுபானத்தின் அத்தகைய அளவு தொடர்பாக அத்தகைய இராஜதந்திர பணிக்குழுவின் வெளிநாட்டுக் கணக்கிலிருந்து கட்டணம் செலுத்தப்பட்டால், மேலே (4) மற்றும் (5) இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்வை அறவிடப்படவோ அல்லது சேகரிக்கப்படவோ கூடாது.

2022, திசெம்பர் 31 ஆந் திகதிய 2312/70 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, யூன் 30.

EOG 07 - 0203

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.